**காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டம் (மேலதிக நிதியளிப்பு) - 2019**

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டத்தின் (மேலதிக நிதியளிப்பு) 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட சர்வதேச அபிவிருத்திச்சங்கத்தின் கடன்கள் மற்றும் மானியங்களிற்கான பொது நிபந்தனைகளின் 4.09(பீ) பிரிவு மற்றும் 2016 செப்தெம்பர் 05 ஆந் திகதிய 5768-எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் 1 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதிசார் உடன்டிக்கையின் பிரகாரம் விவசாய மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு, கால்நடைவள அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் கடல்நீர் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் தற்போதைய நீர்ப்பாசன அமைச்சு என்பன செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவர்களாக உள்ளதுடன் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் ஊவா மாகாணத்தின் வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. காலநிலை ஆபத்தால் மக்கள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைத்தல் மற்றும் இடர்களை திறம்பட எதிர்கொண்டு செயலாற்றுவதற்கான இயலளவை மேம்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகவுள்ளது. மேலதிக நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 6,048 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 42 மில்லியனாக உள்ளதுடன் முழுத்தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 ஒக்தோம்பர் 15 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிசார் செயலாற்றல்

### 2.1. செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், மேலதிக நிதியளிப்பதற்கான செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் அதிகமாக காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் பொருளாதாரத்தை தாபிப்பதற்கு பிரதான முன்னோடியாக இருப்பதுடன் காலநிலை உட்கட்டமைப்பின் முன்னேற்றம் மற்றும் ஆதார சேவைகள் போன்ற 2 கூறுகளை கொண்டுள்ளது. செயற்திட்ட நடவடிக்கைகளின் அமுலாக்கல் மீது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| இல. | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | ரூபா 6,048 மில்லியனுக்கு சமமான அமெரிக்க டொலர் 42 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்தின் செயற்பாடுகள் ஆரம்பம் முதல் 39 மாதங்கள் கடந்ததன் பின்னர் நிதி ஏற்பாடுகளில் 68.10 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ரூபா 4,118.76 மில்லியனுக்கு சமமான அமெரிக்க டொலர் 24.38 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதனால் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு மிகுதி 12 மாத காலத்தில் 31.90 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சேமிக்கப்பட்ட ரூபா 1,929.24 மில்லியனுக்கு சமமான அமெரிக்க டொலர் 17.62 மில்லியன் தொகையை பயன்படுத்தும் இயலுமை கேள்விக்குரியதாக இருந்தது. ஒப்பந்தங்களை பூர்த்தி செய்தல் மற்றும் ஒப்பந்தகாரின் மதிப்பீட்டு பட்டியல்கள் தாமதமடைந்தமை நிதிசார் செயலாற்றல் குறைவடைந்தமைக்கு பிரதான காரணமாக இருந்தது. | பௌதீக இலக்குகளை அடைவதற்கு இயலக்கூடியவாறு இருக்கவில்லை. | கருத்துரைகள் தெரிவிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் செயற்திட்டங்களின் பிரயோகங்கள் மீதான நலிவுகளை தவிர்ப்பதற்கு இயலக்கூடியவாறு தாமதங்களிற்கான காரணங்கள் புலனாய்வு செய்யப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. |
| (ஆ) | வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 2,984.2 மில்லியன் ஆன 80 ஒப்பந்த பொதிகள் நீர்ப்பாசன திணைக்களத்தினால் கைளிக்கப்பட்டிருந்ததுடன், அதில் 45 பொதிகள் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 35 ஒப்பந்த பொதிகள் ஒப்பந்த கால எல்லையில் பூர்த்தி | பௌதீக இலக்குகளை அடைவதற்கு இயலக்கூடியவாறு இருக்கவில்லை. | இனங்காணப்பட்ட 82 ஒப்பந்த பொதிகளின் நிதியினை பெற்றுக் கொள்ளும் இயலுமையின் அடிப்படையில் செயற்திட்ட ஆரம்பத்தின் போது 68 பொதிகள் கையளிக்கப்பட்டிருந்தன. 2019 இன் 2 ஆவது அரையாண்டில் | எதிர்காலத்தில் செயற்திட்டங்களின் பிரயோகங்கள் மீதான நலிவுகளை தவிர்ப்பதற்கு இயலக்கூடியவாறு தாமதங்களிற்கான காரணங்கள் புலனாய்வு செய்யப்பட வேண்டுமென |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்படாதிருந்ததுடன், ரூபா 1,578.1 மில்லியன் பெறுமதியான இந்த ஒப்பந்த பொதிகளின் தாமதிக்கப்பட்ட காலம் 01 மாதம் முதல் 18 மாதங்கள் வரையாக இருந்தது. | | இலங்கை ரூபாய்க்கு எதிராக அமெக்க டொலரின் பெறுமதி அதிகரித்தமையின் காரணமாக கிடைத்த சேமிப்பிலிருந்து மிகுதி 14 பொதிகள் கையளிக்கப்பட்டிருந்தன. சிறுபோகம் மற்றும் பெரும்போகத்திற்கு நீரை விநியோகிக்கும் போது இந்த ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதனால் ஒப்பந்தகாரருக்கு வரையறுக்கப்பட்ட ஓய்வுகாலம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது. (நீர் நிறுத்தப்படும் காலம்) தற்போது இந்த ஒப்பந்தங்களில் அனேகமான அளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | வேண்டப்பட்டது. |
| (இ) | சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ரூபா 1,061.59 மில்லியன் பெறுமதியான 27 ஒப்பந்த பொதிகள் இலங்கை மஹாவலி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 670.1 மில்லியன் பெறுமதியான 15 ஒப்பந்த பொதிகள் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி அளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்த காலப்பகுதியில் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு தவறியமையின் காரணமாக ரூபா 138.2 மில்லியன் தொகையான 02 ஒப்பந்த பொதிகள் இரத்துச்செய்யப்பட்டிருந்தன. | பௌதீக இலக்குகளை அடைவதற்கு இயலக்கூடியவாறு இருக்கவில்லை. | 14 ஒப்பந்த பொதிகள் பூர்த்தி செய்யப்படாமல் எஞ்சியிருந்தன. 14 ஒப்பந்த பொதிகளில் 06 ஒப்பந்த பொதிகள் ஒப்பந்த காலத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 08 ஒப்பந்த பொதிகள் பூர்த்திசெய்தல் தாமதமடைந்திருந்தது. அனேகமாக இந்த ஒப்பந்த பொதிகள் பிரதான மற்றும் கிளை வாய்க்கால்களை புனரமைப்பவைகளாக இருந்தன. இந்த வேலைகள் நீர் நிறுத்தப்படும் மார்ச் மற்றும் ஏப்ரல், ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் மாதங்களில் மாத்திரமே | எதிர்காலத்தில் செயற்திட்டங்களின் பிரயோகங்கள் மீதான நலிவுகளை தவிர்ப்பதற்கு இயலக்கூடியவாறு தாமதங்களிற்கான காரணங்கள் புலனாய்வு செய்யப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. |

செய்யக்கூடியதாக இருந்தது. தண்ணீர் நிறுத்தப்படும் கால எல்லையில் மாதத்திற்கு ஒரு தடவையாவது குடிநீர் தேவைக்காக நீர் விநியோகிக்க வேண்டியிருந்தமையால் ஒப்பந்த செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக மண்ணிற்காக அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதிலும் இந்த வேலைகள் குறித்த நேரத்தில் பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டதற்கு ஒரு காரணமாகும். இந்த சகல பொதிகளும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படும்.

ரூபா 111.3 மில்லியன் பெறுமதியான 02 ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. C வலயத்தின் பிரதான வாய்க்கால் முறைமையில் தொடர்ச்சியாக நீர் வழங்கப்பட்டமை மற்றும் பிரதேசத்தில் பொருத்தமான பொருட்கள் பெறமுடியாமையின் காரணமாக வேலைகளைச் செய்தல் பிரயோக ரீதியில் கஷ்டமாக இருந்தமையினால் ஒரு ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அதனால் இலங்கை மஹாவலி அதிகார சபையினால் இந்த ஒப்பந்தம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஏனைய எந்தவொரு நிதி மூலம் கிடைத்த பின்னர் கால ரீதியில் மேற்கொள்ளப்படும் என்ற எண்ணக்கருவில் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இலங்கை மஹாவலி அதிகார சபையின் L முறைமையின் ஒப்பந்தகாரரின் நலிவான செயல்முன்னேற்றத்தின் காரணமாக இரண்டாவது ஒப்பந்த பொதியும் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. நீர்ப்பாசன குளங்களின் புனரமைப்பு மற்றும் அவசர தேவைகளை இலங்கை மஹாவலி அதிகாரசபை செய்யவேண்டியிருந்தமையால் எஞ்சியுள்ள வேலையை உலக வங்கி செய்திட்ட முகாமைத்துவ பிரிவுடன் இணைந்து கட்டாய கணக்கு முறை மூலம் மேற்கொள்ள முடிவுசெய்திருந்தது. இது வரையில் 75 சதவீத வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், 2020 இற்கு முன்னர் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஈ) | ரூபா 1,655 மில்லியன் பெறுமதியான 11 ஒப்பந்த பொதிகள் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு (ஊவா) கையளிக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 465.4 மில்லியன் பெறுமதியான 05 ஒப்பந்த பொதிகள் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஒப்பந்தகாரர்களின் கவனமின்மையின் காரணமாக ரூபா 1,190.15 மில்லியன் பெறுமதியான 06 | பௌதீக இலக்குகளை அடைவதற்கு இயலக்கூடியவாறு இருக்கவில்லை. | கணக்காய்வாளரின் அவதானிப்புக்கள் சரியானதாகும், 11 ஒப்பந்த பொதிகளில் 08 பொதிகள் பூர்த்தி செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. செய்து கொண்டிருக்கின்ற ஏனைய ஒப்பந்தப் பொதிகளின் | எதிர்காலத்தில் செயற்திட்டங்களின் பிரயோகங்கள் மீதான நலிவுகளை தவிர்ப்பதற்கு இயலக்கூடியவாறு தாமதங்களிற்கான காரணங்கள் புலனாய்வு செய்யப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. |

| | |
|---|---|
| ஒப்பந்த பொதிகள் ஒப்பந்த காலத்தில் பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தது. | செயல்முன்னேற்றம் 90 சதவீதத்தை விட மேற்பட்டிருந்தது. இது வரை மொத்த நிதிசார் செயல்முன்னேற்றம் ரூபா 1,384,836,937.03 ஆகும். மேலே குறிப்பிடப்பட்ட சகல ஒப்பந்த பொதிகளும் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட முடியும். (கொடுப்பனவுகள் உட்பட) |

**2.2. களப் பரிசோதனையின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல. | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்தகாரரினால் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்ட செயல்முன்னேற்ற அறிக்கையில் கண்டி பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தினால் அமுல்படுத்தப்பட்ட 08 ஒப்பந்த பொதிகளில் 07 பொதிகள் ஒப்பந்தகாரர்களினால் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. வேலைத்தளத்தின் களப் பரிசோதனையின் போது மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தின் பிரகாரம் ரூபா 6,498,664 கிரய அளவில் பட்டியல் காணப்பிக்கப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன், அதாவது தேவையான இடங்களில் வாய்க்காலின் இரு பக்கமும் மண் நிரப்புதல் மற்றும் மரங்களுக்காக நீரை அனுப்புதல் போன்றவை ஒப்பந்தகாரரினால் குறிப்பாக காண்பிக்கப்பட்டுள்ள வேலை நடவடிக்கைகள் பூர்த்தி | பணிகளை சரியான பிரகாரம் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | பொருத்தமான பொருட்களை கண்டுபிடிப்பதற்கும், உரிய அதிகார தரப்பினரிடம் இருந்து தேவையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கும் பிரதேசத்தில் காணப்பட்ட அதிக கஷ்டங்களின் காரணமாக ஒப்பந்தகாரருக்கும் இந்த உப விடயங்களை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. பாராளுமன்றம் உள்ளடங்களாக கூட்டங்கள் பலவற்றின் போது பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டது. குறித்த வேலைகள் 2020 திசெம்பர் 31 இல் பூர்த்தி செய்யப்படும். | ஒப்பந்தகாரருக்கு உடனடியாக வேலையை பூர்த்தி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஆ) | ஹஸலக பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் பகுதி செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ரூபா 471.81 மில்லியன் பெறுமதியான 08 ஒப்பந்த பொதிகள் கையளிக்கப்பட்டிருந்தமையும், 2019 பெப்ரவரி மாதம் வரையில் அதை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தமையும் கணக்காய்வு பிரசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் ரூபா 380.46 மில்லியன் பெறுமதியான 06 ஒப்பந்த பொதிகள் 2020 யூலை வரையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்தகாரரினால் செயலாற்றல் பிணை முறியின் செல்லுபடிக் காலத்தை நீடித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 6,498,664 கிரயமான ஒப்பந்தங்கள் ஒப்பந்தகாரரினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பணிகளை சரியான பிரகாரம் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | மினிப்பே பிரதான வாய்க்கால் 74 கிலோ மீற்றர் நீளமாக இருந்ததுடன், நீரை விநியோகித்தல் கட்டம் கட்டமாக பிரிக்கப்பட்டுள்ளது. கட்டம் III மற்றும் கட்டம் IV இற்கு நீரை விநியோகித்தல் கட்டம் II மற்றும் IV இற்கு நீரை விநியோகிப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்படுகிறது. அதனால் கட்டம் II மற்றும் III வேலை நடவடிக்கைகளை ஆரம்பித்தல் தண்ணீர் விநியோகிக்கப்படாத காலம் குறைவான கால எல்லையாகும். சிறுபோகம் மற்றும் பெரும் போகத்திற்கு நீரை வழங்கும் காலத்தில் இந்த ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதனால் ஒப்பந்தகாரருக்கு வரையருக்கப்பட்ட ஓய்வு காலமே இருந்தது. இது வரையில் மூன்று ஒப்பந்தங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மிகுதி 04 பொதிகளும் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் பூர்த்தி செய்யப்படும். | செயலாற்றல் பிணை முறியின் செல்லுபடிக் காலத்தை நீடிப்பதற்காக ஆக்க பூர்வமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 58.82 மில்லியன் பெறுமதியான செல்லக்கத்தரகம - கிரிவெகர வீதி அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் அளவிடைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் தடிப்பு உடன் கூடிய கொங்கிரீட் இடப்படாமையின் காரணமாக ரூபா | நீண்டகாலம் நிலைத்திருத்தல் மற்றும் தரத்தன்மை என்ற நியமங்களுக்கு இணங்க வீதி நிர்மாணிக்கப்படவில்லை. | செயற்திட்டத்தினால் இது வரையிலும் ஒப்பந்தகாரருக்கு வேலை ஆரம்பிப்பு முற்பணம் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தமையினால் இது வரையில் எவ்வளவு | ஒப்பந்தகாரருக்கு முறையாக வேலையை பூர்த்தி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட வேண்டும். |

1,797,120 தொகையான நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது. அதன் விளைவாக எதிர்பார்த்த நியமங்களுக்கு இணங்க இந்த வீதிகள் நிர்மாணிக்கப்படாமையின் காரணமாக வீதி நீண்டகாலம் நிலைத்திருத்தல் மற்றும் தரத்தன்மை என்பன பிரச்சினைக்குரியதாக இருந்தது.

நட்டம் ஏற்பட்டிருந்தது எனக் கூறுதல் கஷ்டமாகும். கணக்காய்வு அறிக்கை மூலம் சுட்டிக் காட்டுப்பட்டுள்ள பிரகாரம் ஊவா மாகாணத்தின் செயற்திட்ட பணிப்பாளரினால் நடைபாதையில் தற்போது காணப்படுகின்ற தார் படையை அகற்றுவதற்கு ஏற்பட்டிருந்தமையினால் Shoulder கொங்கிரீட் தட்டின் ஆழம் 150 மில்லி மீற்றர் தடிப்பில் பேணுதல் சாத்தியமற்றதாகும்.
(குவிக்கப்பட்டிருக்கும் மட்டம் தார் தட்டின் மேலாக பேணப்பட வேண்டும். இருந்த போதிலும் Shoulder ஏனைய ஓரங்களின் தடிப்பம் 150 மில்லி மீற்றர் தடிப்பம் உரியவாறு பேணப்பட்டிருந்தது. பட்டியலிடும் பணிகளுக்காக கொங்கிரீட் தட்டின் உள்ளபடியான ஆழம் நடுப்பகுதியில் வெட்டுவதன் மூலம் உறுதிப்படுத்த முடியுமாக இருந்ததுடன், அதன் பிரகாரம் செய்யப்பட்ட உள்ளபடியான வேலை அளவிற்கு செலுத்தப்படுகின்றது.
சாக்கு அல்லது ஏனைய பொருத்தமான பொருட்களை பயன்படுத்தி கொங்கிரீட் இடுவது வலுவானதாக கொங்கிரீட் இடப்படுவதை எதிர்பார்த்தாகும். அதனால் அவ்வாறு கொங்கிரீட் இட்டு ஆபத்தை இன்னுமொரு இடத்திற்கு அனுப்பாத

பரிசோதனை முறைமையின் மூலம் பரீட்சிக்கப்பட்டிருந்ததுடன், குறித்த வலு கிடைத்துள்ளதா என உறுதிப்படுத்தப்படுகின்றது. இரும்பு கம்பிகளுக்கு இடையிலான இடைவெளி சில இடங்களில் வேறுபடுவதன் காரணமாக வலையினை அமைத்தல் மற்றும் கம்பிகளின் சக்தி ஆரோக்கியமானதாகும். எனினும் இரும்பு கம்பிகளின் உள்ளபடியான அளவு அதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

*குறிப்பு: இந்த செயற்பாடு மேலதிக நிதியுதவியின் கீழ் வரப்பட வேண்டிய போதிலும் மேற்பார்வை மூலம் செயற்திட்டம் உள்ளபடியான நிதி கணக்காய்வு அறிக்கையில் உங்களால் உட்படுத்தப்பட்டுள்ளது.*